TNVP020016032018

**தன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை :- திருமதி. K. பாரதி M.L.,**

**முதன்மை சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19 ம் நாள் புதன்கிழமை**

**அசல் வழக்கு எண்.828/2018**

1. பி. பவானி (எ) விஜயகுமாரி

2. மைனர் புவிக்ஷாஸ்ரீ

(2 ம் வாதி மைனருக்கு கார்டியன் தாயார் 1 ம் வாதி பவானி (எ) விஜயகுமாரி)

... வாதிகள்

//எதிர்//

ஆர். பாஸ்கரன் ... பிரதிவாதி

இவ்வழக்கு 21.12.2018 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு கடந்த 12.08.2026 தேதியில் இறுதியான விசாரணைக்காக என் முன்னர் வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.தாமோதரன், அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.R.வெங்கடேசன், அவர்கள் முன்னிலையாகியும், வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய பிரதிவாதிக்கு

வாய்ப்பு வழங்கப்பட்டும், பிரதிவாதி தரப்பில் எந்தவித பிரதிநிதித்துவமும் இல்லாததால் கட்டளை 17 விதி (1)(2)(e)சி.பி.சி-யின் படி வாதி தரப்பு முடிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..........

## தீர்ப்புரை

தாவா வாதிகளுக்கு கடந்தகால ஜீவனாம்சத்திற்கும், எதிர்கால ஜீவனாம்சத்திற்கும் சேர்த்து ரூ.2,82,000/-ம் மற்றும் இவ்வழக்கு செலவுத்தொகையும் வழங்கக்கோரி இவ்வழக்கு தாக்கல்.

**2. வழக்குரையின் சுருக்கம் :-**

1ம் வாதிக்கும், பிரதிவாதிக்கும் 30.11.2017 அன்று உளுந்தூர்பேட்டை, பெரியசெவலை சர்க்கரை ஆலை விவசாயிகள் சமுதாயக்கூடத்தில் வைத்து திருமணம் நடைபெற்றது. பிரதிவாதி பெரிய தினசரி நாளிதழில் நிருபராக வேலை பார்த்து மாதம் ரூ.50,000/-க்கு குறையாமல் சம்பாதிப்பதாகத் தெரிவித்து 1ம் வாதியை பெண்கேட்ட நிலையில் 1ம் வாதி இளவயதுடையவராக இருப்பதால் அவரது பெற்றோர் தயங்கிய நிலையில் மகள்போல் வைத்து பார்த்துக்கொள்வதாகத் தெரிவித்து பெண் கேட்டதால் 1ம் வாதியின் பெற்றோரும் சம்மதித்தனர். 25.09.2017 அன்று திருவெண்ணெய்நல்லூர் கம்பன் திருமண மண்டபத்தில் 1ம் வாதியின் பெற்றோர் செலவில் திருமண நிச்சயம்

நடந்தது. திருமணச்செலவிற்கு ரூ.5,00,000/-ம் வேண்டும் என பிரதிவாதியின் பெற்றோர் நிர்பந்தித்த நிலையில் 1ம் வாதியின் பெற்றோர் ரூ.3,00,000/-ம் கொடுத்துள்ளனர். மேலும் 25 பவுன் நகை மற்றும் 6 பவுன் தங்கச்சங்கிலி மற்றும் ரூ.2,00,000/- மதிப்பில் வீட்டு உபயோகப்பொருட்கள் மற்றும் ரூபாய் ஒருலட்சம் மதிப்புள்ள இருசக்கர வாகனம் ஆகியவற்றை 1ம் வாதியின் பெற்றோர் வாங்கிக்கொடுத்துள்ளனர். திருமணத்திற்குப் பிறகு பிரதிவாதி மூன்று மாதகாலம் மட்டும் 1ம் வாதியுடன் சுமூகமாக குடும்பம் நடத்தினார். 1ம் வாதியை சீர்வரிசைகள் போதாது என்று கூறி பிரதிவாதியின் தாயார் கடுஞ்சொல்லால் திட்டி வந்ததால் 1ம் வாதி மன அழுத்தத்திற்கு ஆளானார். பிரதிவாதி மனைவிக்கு ஆதரவாக நடந்துக்கொள்ளவில்லை. 1ம் வாதி கருவுற்றிருந்த நிலையில் சரியான நேரத்தில் உணவு வழங்காததால் அவர் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டார். 1ம் வாதி கருவுற்றது குறித்து பிரதிவாதி சந்தேகங்களை எழுப்பியுள்ளார். தாய்சேய் நல அட்டையில் மாதவிலக்கான தேதி 04.11.2017 என்று உள்ளதை தவறாகக் கற்பனை செய்து கொண்டு பிரதிவாதி சந்தேகப்பட்டு தவறான தகவலுடன் வழக்கறிஞர் மூலம் 23.03.2018 அன்று அறிவிப்பு அனுப்பியுள்ளார். விழுப்புரம் இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் HMOP 44/2018 என்ற மனுவை சேர்ந்து வாழ உத்தரவிடக்கோரி 1ம் வாதி தாக்கல் செய்தார். அந்த மனுவில் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் முன்னிலையாகியுள்ளார். மேலும் 10.04.2018 அன்று 1ம் வாதி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். 24.03.2018

அன்று 1ம் வாதி உளுந்தூர்பேட்டை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். அங்கு விசாரணைக்கு முன்னிலையான பிரதிவாதி 1ம் வாதிக்கு பிரசவம் ஆகும் வரையில் அவர் தாயார் வீட்டிலேயே இருக்க வேண்டியது என்றும் வாரம் மூன்றுமுறை பிரதிவாதி 1ம் வாதியை பார்த்துவிட்டு வரவேண்டும் என்றும், பேசி முடித்ததை ஒப்புக்கொள்வதாகக் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். அதன்பிறகு ஒருநாள் கூட பிரதிவாதி 1ம் வாதியை சந்திக்கவில்லை. கடந்த 22.08.2018 அன்று 2ம் வாதியான பெண்குழந்தை பிறந்த நிலையில் பிரதிவாதிக்கு தகவல் கொடுத்தும் வந்து பார்க்கவில்லை. 1ம் வாதி உணவு, உடை, இருப்பிடமின்றி கஷ்டஜீவனம் செய்து வருகிறார். பிரதிவாதிக்கு சொந்தமாக 5 ஏக்கர் நிலம் உள்ளது. மேலும் உளுந்தூர்பேட்டை, துலங்கம்பட்டு பஸ்நிறுத்தம் அருகில் கே.பி.ஆர். டிராவல்ஸ் நடத்தி வருகிறார். அதில் கார்கள், மினி லாரிகள், டிராக்டர்கள் ஆகியவற்றை வாடகைக்கு விட்டு சம்பாதித்து வருகிறார். செலவுகள் போக வருடம் ஒன்றுக்கு சுமார் 5 லட்சத்திற்கு மேல் ஈட்டி வருகிறார். வாதிகளுக்கு வழக்குரை அட்டவணையில் கூறியவாறு கடந்தகால ஜீவனாம்சம் மற்றும் எதிர்கால ஜீவனாம்சம் சேர்த்து ரூ.2,82,000/-ம் வழங்கவேண்டும்.

3. <u>**பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்**</u>:-

வழக்குரை சங்கதிகள் தவறானது. பிரதிவாதி பெரிய பத்திரிக்கையில்

நிருபராக வேலை செய்வதாக கூறி பெண் கேட்டார் என்று சொல்வது தவறு. பிரதிவாதி நம் தினமதி என்ற நாளிதழில் நிருபராக உள்ளார். அதில் விளம்பரம் வாங்கிக்கொடுத்தால் 5 சதவிகித கமிஷன் உண்டு. அவரால் மாதம் ரூ.5000/-ம் கூட சம்பாதிக்க முடியாது என்ற விவரம் 1ம் வாதியின் குடும்பத்திற்குத் தெரியும். திருமணச்செலவிற்கு ரூ.3,00,000/-ம் கொடுத்ததாகவும், 1ம் வாதிக்கு 25+6 பவுன் நகை கொடுத்ததாகவும் கூறுவது தவறு. உளுந்தூர்பேட்டை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கடந்த 09.07.2018 அன்று பேசப்பட்டதில் 1ம் வாதிக்கு சேரவேண்டியது எனக்கூறி 14-1/2 பவுன் நகை, பாத்திரங்கள் மற்றும் இருசக்கர வாகனம் அனைத்தையும் பெற்றுச் சென்றுவிட்டனர். திருமணம் நடந்து ஒருவாரம் கூட 1ம் வாதி பிரதிவாதியின் வீட்டில் குடியிருக்கவில்லை. வலிப்பு நோயானது மரபணு பிரச்சினையால் பிறவியில் வரக்கூடியது. சரிவர உணவு அளிக்காததால் வலிப்பு நோய் ஏற்பட்டதாக பொய்யாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரதட்சணை கேட்டு பிரதிவாதியின் பெற்றோர் துன்புறுத்தியதாகச் சொல்வது தவறு. உளுந்தூர்பேட்டை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் 11.07.2018 அன்று பொய்யான புகார் கொடுத்ததன் அடிப்படையில் பிரதிவாதி மற்றும் அவரது பெற்றோர் மீது குற்ற எண்.17/2018 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 30.07.2017 அன்று திருமணம் நடந்த பிறகு இருவருக்கும் முதலிரவு நடைபெற்றது, நான்கு நாட்கள் 1ம் வாதியின் வீட்டில் தங்கிய நிலையில் பிறகு பிரதிவாதியின் வீட்டில் இல்லறத்தை நடத்தியுள்ளனர். தொடர்ந்து 10 நாட்கள்

கூட 1ம் வாதியானவர் பிரதிவாதியின் வீட்டில் தங்கியது இல்லை. திருமணமான 4 நாட்களில் 1ம் வாதியின் தாயார் தனது மகள் கர்ப்பமாக இருப்பதாகவும், வாந்தி எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி சங்கதி பிரதிவாதிக்கு சந்தேகத்தை ஏற்படுத்தினாலும் அவர் அதனை பெரிது படுத்தாமல் விட்டுவிட்டார். 1ம் வாதி பலமணிநேரம் அலைபேசியில் பேசிக்கொண்டே இருப்பார். திருமணமான 5 வது மாதத்தில் 1ம் வாதிக்கு 15 முறை நொடிப்பு வந்தது. மேலும் 1ம் வாதி தனக்குத்தானே முனுமுனுப்பது, பைத்தியம் பிடித்தவர்போல் பேசுவது என நடந்து கொண்டதால் பிரதிவாதிக்கு பயம் ஏற்பட்டுவிட்டது. அதனை மறைக்க பிரதிவாதியின் வீட்டில் குளியல் அறை கட்டினால்தான் வருவேன் என்று சொல்லி தாயார் வீட்டில் தங்கிக்கொண்டார். விழுப்புரம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் மனுதாரருக்கு மருத்துவம் நடைபெறும்போது மருத்துவர் ஒருவர் 1ம் வாதியைப்பார்த்து தலையில் இருந்த டியூப்பை அகற்றி ஆகிவிட்டதா எனக்கேட்டபோதுதான் 1ம் வாதிக்கு ஏதோ நோய் காரணமாக தலையில் அறுவை சிகிச்சை நடந்த சங்கதி பிரதிவாதிக்கு தெரியவந்தது. 1ம் வாதி மூன்று வேளையும் எடுத்துக்கொள்ளும் மாத்திரையைப்பற்றி பெண் மருத்துவர் 1ம் வாதியிடம் பேசியபோது அவ்வாறான மாத்திரையை எடுத்துக்கொள்வதால் குழந்தை ஊனமாகவோ, மூளைவளர்ச்சி குறைவாகவோ பிறக்கும் என்றும் மாத்திரையை விட்டுவிடும்படியும் கூறினார். 1ம் வாதிக்கு தொடர் சிகிச்சை வழங்கும் மருத்துவர் மாத்திரையை நிறுத்தினால் ஆபத்து எனக்கூறினார். 1ம்

வாதியின் உடல்நிலை குறித்து விவரம் கேட்டபோது அவரது பெற்றோர் முரண்பட்ட தகவல்களைக் கூறி வந்தனர். 1ம் வாதிக்கும், பிரதிவாதிக்கும் 30.11.2017 அன்று திருமணம் நடந்த நிலையில் பிரசவம் ஆகும் நாள் என 11.08.2018 என தாய்சேய் நல அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் பார்த்தால் திருமணம் நடந்து 8 மாதம் 11 நாட்களில் குழந்தை பிறக்கப்போவதாகத் தெரியவருவதால் மேற்படி சங்கதி சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. 1ம் வாதியும் அவரது குடும்பத்தாரும் 11.04.2018 அன்று 10 அடியாட்களுடன் வீட்டிற்கு வந்து வீட்டை ஆக்கிரமித்துக்கொண்டனர். சொத்து மற்றும் பணத்தை அபகரிப்பதற்காக இவ்வாறான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் வாதியின் பெற்றோர் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பிரதிவாதியின் பெற்றோருக்கு ஒரு ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளது. நல்ல இல்லறத்தை எதிர்பார்த்து பிரதிவாதி திருமணம் செய்த நிலையில் வாழ்க்கையை மருத்துவமனையிலேயே கழித்து 1ம் வாதியை மோசடியாக திருமணம் செய்து வைத்துள்ளனர். வழக்கு தள்ளுபடியாகவேண்டும்.

4. **<u>மேற்படி பிராது எதிர்வழக்குரை சங்கதிகளை கருத்தில் கொண்டு கீழ்கண்ட எழுவினாக்கள் விசாரணைக்காக வனையப்பட்டுள்ளது.</u>**

1. வாதி, பிரதிவாதியிடம் கடந்த கால ஜீவனாம்சத்திற்கும், எதிர்கால ஜீவனாம்சத்திற்கும் சேர்த்து ரூ.2,82,000/-ஐ வசூல் செய்ய உரிமையுள்ளதா?

2. வாதி கோரியபடி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வாதிக்கு

கிடைக்கத்தக்கதா?

3. என்ன உத்தரவு?

5. இவ்வழக்கு விசாரணைக்கு இருந்த நிலையில் வாதி தரப்பில், வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.16 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு பின் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தும், வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய பிரதிவாதிக்கு பலமுறை வாய்ப்பு வழங்கப்பட்டும், பிரதிவாதி தரப்பில் எந்தவித பிரதிநிதித்துவமும் இல்லாததால் கட்டளை 17 விதி (1)(2)(e)ன் படி வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

### 6. எழுவினாக்கள் 1 முதல் 3 க்கான தீர்வு :-

6.1 வழக்குரை, எதிர்வழக்குரை, வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. 1ம் வாதிக்கும், பிரதிவாதிக்கும் 30.11.2011 அன்று உளுந்தூர்பேட்டை பெரியசெவலை கிராமத்தில் கரும்பு ஆலை விவசாயிகள் சமுதாய கூடத்தில் திருமணம் நடந்ததாக வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கதி பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், வா.சா.ஆ 1 திருமண அழைப்பிதழைப் பரிசீலித்ததில் 1ம் வாதிக்கும், பிரதிவாதிக்கும் 30.11.2011 அன்று திருமணம் நடந்துள்ளது தெரியவருகிறது.

6.2 பிரதிவாதி தரப்பினர் திருமணச் செலவுக்காக ரூ.5,00,000/- கேட்டதாக

வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள சங்கதியும் ரூ.3,00,000/- வாதியின் பெற்றோரால் பிரதிவாதியிடம் கொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள சங்கதியும் பிரதிவாதி தரப்பால் மறுக்கப்பட்டுள்ளது. 3 மாத காலம் சுமூகமாக குடும்பம் செய்த நிலையில் பிரதிவாதியின் தாயார் சீர்வரிசை போதவில்லை என 1ம் வாதியை திட்டியதாகவும், கொடுமை செய்ததாகவும், வாதி தரப்பில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் பிரதிவாதி தரப்பால் எதிர்வழக்குரையில் மறுக்கப்பட்டுள்ளது. கருவுற்ற நேரத்தில் சரியாக உணவு வழங்காததால் 1ம் வாதி வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டதாக வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் மரபணு கோளாறு காரணமாக பிறவியில் ஏற்பட்ட பிரச்சனை என காரணம் கூறப்பட்டுள்ளது.

6.3 ஆரம்ப சுகாதார மையத்தில் 1ம் வாதிக்கு வழங்கப்பட்ட தாய் சேய் நல அட்டையில் கடைசி மாதவிலக்கு ஏற்பட்ட தேதி 04.11.2017 எனவும் எதிர்பார்க்கப்படும் பிரசவ நாள் 11.08.2018 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதை வைத்து பிரதிவாதியும் அவரது பெற்றோரும் தவறாக கற்பனை செய்துகொண்டு 1ம் வாதி கருவுற்றதை சந்தேகக் கண்ணோடு பார்த்ததாக வாதியின் வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் 30.11.2017 அன்று தான் திருமணம் நடந்துள்ளது எனும் நிலையில் திருமண நாளிலிருந்து எதிர்பார்க்கப்படும் பிரசவ நாளான 11.08.2018 க்கு இடைப்பட்ட நாட்களைக் கணக்கிட்டுப்

பார்த்தால் திருமணம் நடந்த நாளிலிருந்து 8 மாதம் 11 நாட்களில் குழந்தை பிறக்கப்போவதாக மருத்துவச் சான்று கூறுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6.4 மேற்கண்ட சங்கதியைப் பரிசீலித்ததில் கடைசியாக மாத விலக்கு ஏற்பட்ட தேதியிலிருந்து பிரசவ தேதியை கணக்கிடாமல் திருமணமான நாளிலிருந்து பிரசவத் தேதியைக் கணக்கிட்டுக்கொண்டு பிரதிவாதி 1ம் வாதியை சந்தேகித்துள்ளார் எனத் தெரியவருகிறது. இவ்வாறான நிலையில் வாதியின் வழக்கில் பிரதிவாதி வாதியை சந்தேகித்ததாகக் கூறியுள்ள சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது.

6.5 1ம் வாதிக்கு பல்வேறு உடல்நலக் கோளாறு இருப்பதாகவும் அதை மறைத்து திருமணம் நடந்துள்ளதாகவும், பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி எதிர்வழக்குரை சங்கதியை வாதி தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்தும், பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் விசாரித்தும், சான்றாவணங்கள் தாக்கல் செய்தும் நிரூபிக்கவில்லை. பிரதிவாதி அவரது மனைவியான 1ம் வாதியையும், மகளான 2 ம் வாதியையும் பராமரிக்காமல் இருந்து வருவதாகத் தெரிவித்து ஜீவனாம்ச பரிகாரம் கோரி வாதி தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதிக்கு வருமானம் குறைவு என்று கூறியுள்ளதற்கு ஆதாரங்கள் எதுவும் இல்லை. வாதிகள் தரப்பில் ஜீவனாம்சம், எதிர்கால ஜீவனாம்சம், மருத்துவம், உடைகள் பராமரிப்பு என பல்வேறு

தலைப்புகளில் ஜீவனாம்சம் கோரப்பட்டுள்ளது.

6.6 மேற்கண்ட விவாதங்களிலிருந்து வாதிகளின் வழக்கு பகுதியாக அனுமதிக்கத்தக்கது என தெரியவருகிறது. எனவே கீழ்கண்டவாறு தீர்ப்பளிக்கப்படுகிறது.

**முடிவாக**, 1ம் வாதிக்கு கடந்தகால பராமரிப்புத்தொகையாக மாதம் ரூ.5000/-ம் வீதம் 15.03.2018 முதல் 14.12.2018 வரையிலும், அதன்பின்னர் எதிர்கால பராமரிப்புத்தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.5000/-ம் வீதமும், 2ம் வாதிக்கு கடந்த கால பராமரிப்புத்தொகையாக ரூ.5000/-ம் வீதம் கடந்த 22.08.2018 முதல் 20.12.2018 வரையிலும் அதன் பின்னர் எதிர்கால பராமரிப்புத்தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.5000/-ம் வரும் விகிதாச்சார செலவுத்தொகையுடனும் பிரதிவாதியிடம் இருந்து வசூல் செய்து பெற்றுக்கொள்ள உரியவர்கள் என இவ்வழக்கு அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் 19.08.2026 புதன்கிழமை ஆகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2026.08.21 17:36:15 +0530

முதன்மை சார்பு நீதிபதி,

விழுப்புரம்.

**வாதி தரப்பு சாட்சியங்கள்:-**

வா.சா.1 திருமதி. பவானி க/பெ. பாஸ்கர்

**வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் விபரம் :-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ 1. | 20.11.2017 | 1ம் வாதிக்கும், பிரதிவாதிக்கும் நடைபெற்ற திருமண அழைப்பிதழ் |
| வா.சா.ஆ 2. | -- | 1ம் வாதியின் ஆதார் அட்டை நகல் |
| வா.சா.ஆ 3. | 23.03.2018 | பிரதிவாதியின் வழக்கறிஞர், 1ம் வாதிக்கு அனுப்பிய அறிவிப்பு |
| வா.சா.ஆ 4 | 10.04.2018 | வாதியின் வழக்கறிஞர், பிரதிவாதி வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு |
| வா.சா.ஆ 5 | -- | 1ம் வாதி விழுப்புரம் இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் பிரதிவாதி 1ம் வாதியுடன் சேர்ந்து வாழ உத்தரவிடக்கோரி எச்.எம்.ஓ.பி.44/2018 தாக்கல் செய்த மனு |
| வா.சா.ஆ 6 | -- | 2 ம் வாதியின் பிறப்பு சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ 7 | 21.07.2018 | 1ம் வாதி வழக்கறிஞர் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு |
| வா.சா.ஆ 8 | 26.07.2018 | பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை |
| வா.சா.ஆ 9 | 28.07.2018 | பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை |
| வா.சா.ஆ 10 | 04.08.2018 | பிரதிவாதி வழக்கறிஞர் 1ம் வாதிக்கு முகவரியிட்டு 1ம் வாதி வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ 11 | -- | 1ம் வாதி வழக்கறிஞருக்கு பிரதிவாதியின் வழக்கறிஞர் அனுப்பிய பதில் அஞ்சல் உறை |
| வா.சா.ஆ 12 | 29.12.1990 | பிரதிவாதி பேரில் சொத்து இருப்பதற்கான கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ 13 | 25.01.1993 | பிரதிவாதி பேரில் சொத்து இருப்பதற்கான கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ 14 | 28.01.1993 | பிரதிவாதி பேரில் சொத்து இருப்பதற்கான கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ 15 | -- | பிரதிவாதி பெயரில் உள்ள கணினி சிட்டா எண்.65 |
| வா.சா.ஆ 16 | -- | பிரதிவாதி பெயரில் உள்ள கணினி சிட்டா எண்.225 |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-**

இல்லை.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2026.08.21 17:36:23 +0530

முதன்மை சார்பு நீதிபதி,

விழுப்புரம்.